රාජ්‍ය පරිපාලන හා කළමනාකරණ අමාත්‍යාංශය
**அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு**
**Ministry of Public Administration and Management**
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකා. சுதந்திரச் சதுக்கம் கொழும்பு 07 இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.
Website : www.pubad.gov.lk

| | | |
|---|---|---|
| දුරකතන<br>தொலைபேசி: (94) 011-2696211-13<br>Telephone | ෆැක්ස්<br>தொலைநகல் (94) 011-2695279<br>Fax | ඊ-මේල්<br>மின்னஞ்சல் secretary@pubad.gov.lk<br>E-mail |

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No } CS/SLAS/ANN.TRA/SP-2018 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No } | දිනය<br>திகதி:<br>Date } 2017.09.22 |

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
பிரதம செயலாளர்கள்,
ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்,
திணைக்களத் தலைவர்கள்

**<u>வருடாந்த இடமாற்றங்கள் 2018</u>**

**<u>(இலங்கை நிர்வாக சேவை தரம் - விசேட தரம் )</u>**

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த இடமாற்றங்களுக்கு, அவை 2018.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அங்கீகாரம் வழங்குகின்றேன். இத்துடன் காணப்படும் இடமாற்றக் கட்டளைகள், இடமாற்றங்கள் கோரப்பட்டிருக்கும் / இங்கு பெயர்க் குறிப்பிடப்பட்டுள்ள உமது நிறுவனத்தின் சகல அலுவலர்களும் அறியும் வகையில், உரிய திகதியில் புதிய சேவை நிலையத்தில் கடமையைப் பொறுப்பேற்குமாறு தயவுடன் அறிவிக்கவும்.

2. இந்த இடமாற்றங்களை மேற்கொள்ளும் போது இடமாற்றக் குழுவினால் பின்பற்றப்பட்ட இடமாற்ற நடைமுறைகள் 2017.07.03 ஆந் திகதிய 17/2017 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையுடன் ஏற்கனவே உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், இந்த உத்தியோகத்தர்களுக்கு 17/2017 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் அல்லது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட செயலொழுங்குவிதிக் கோவையின் (பாகம் 1) XVIII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கிய முறையில் தமது இடமாற்றக் கோரிக்கைகள் வருடாந்த இடமாற்றக் குழுவினால் கவனத்திற் கொள்ளப்பட்டிராதவிடத்து மாத்திரம் அதற்கிணங்க மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்க முடியும்.

3. மேன்முறையீட்டுக் கோரிக்கைகளுக்கான மாதிரி விண்ணப்பப் படிவமொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேன்முறையீடுகள் தொடர்பில் கவனத்தில் எடுப்பதற்காக மாதிரிப் படிவத்திற்கு இணங்கத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2017.10.06 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்குமாறு அறியத் தருகின்றேன். அத்தினத்துக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது என்பதையும் குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பது அவசியமாகும். மேலும் இடமாற்றப் பட்டியலில் குறித்த உத்தியோகத்தரின் பெயருக்கு எதிரில் உள்ள அடையாள இலக்கம் (File No.) அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கம் மேன்முறையீட்டு விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிராத விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதையும் அறியத் தருகின்றேன்.

4. உங்கள் அமைச்சுக்கு/ திணைக்களத்துக்கு/ மாகாண சபைக்கு/ நிறுவனத்துக்கு வெளியே இடமாற்றம் பெற்றுள்ள உத்தியோகத்தர்களை, பதிலானவர்கள் வரும் வரை வைத்திருக்காது உரிய திகதியில் புதிய சேவை நிலையத்தில் கடமையைப் பொறுப்பேற்கக்கூடியவாறு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

ஒப்பம் /ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

| File No | Name | Current Work Place | Transferred Work Place | Grade | Remarks |
|---|---|---|---|---|---|
| Transfer Batch 0001 | | | | | |
| 3077 | M. Devasurendra | Ministry of Higher Education and Highways | Ministry of Skills Development & Vocational Training | Special | Will be effective on 01-01-2018<br>To a Special Grade vacant post |
| 3176 | Mrs. C.P.W. Gunathilaka | Gampaha Divisional Secretariat of | Ministry of Higher Education and Highways | Special | Will be effective on 01-01-2018 |
| Transfer Batch 0002 | | | | | |
| 3205 | M.A. Thajudeen | Ministry of Industry & Commerce | Ministry of Public Enterprices Development | Special | Will be effective on 01-01-2018<br>To a Special Grade vacant post |
| 3249 | Ms. R.U.Abdul Jaleel | Ninthavur Divisional Secretariat of | Ministry of Industry & Commerce | Special | Will be effective on 01-01-2018 |
| 3639 | A. Lakkathas | Ministry of Public Enterprises Development | Ministry of Mahaweli Development & Environment | Special | Will be effective on 01-01-2018<br>To a Special Grade vacant post |
| Transfer Batch 0003 | | | | | |
| 3540 | Mr. H.D. Sisira | Ministry of National Policies and Economic Affairs - National Centre for Leadership Development | Department of National Museum | Special | Will be effective on 01-01-2018<br>To a Special Grade vacant post<br>(Successor will be given by New Grade I Promotion) |
| Transfer Batch 0004 | | | | | |
| 3605 | W.U.P. Premachandra | Ministry of Hill Country New villages, Infrastructure & Community Development | Southern Provincial Council | Special | Will be effective on 01-01-2018<br>To a Special Grade vacant post |
| 3636 | Mr.D.Jeewanadan | Ministry of Public Administration & Management | Ministry of Hill Country New villages, Infrastructure & Community Development | Special | Will be effective on 01-01-2018 |

| File No | Name | Current Work Place | Transferred Work Place | Grade | Remarks |
|---|---|---|---|---|---|
| Transfer Batch 0005 | | | | | |
| 3633 | I Sabhalingam | Ministry of National Policies and Economic Affairs | Ministry of Development Assignments | Special | Will be effective on 01-01-2018<br>To a Special Grade vacant post |

## மாதிரிப் படிவ இலக்கம் 04

## இலங்கை நிர்வாக சேவையில் இடமாற்றங்கள் 2018 – மேன்முறையீட்டுக்கான விண்ணப்பம்

| இடமாற்றப் பட்டியலின் அடையாள இலக்கம்: ..................................................................................... (இடமாற்றம் கிடைக்கப்பெறாத அலுவலர்கள் மாத்திரம்) |
|---|

அமைச்சு:................................................

திணைக்களம்:.............................................

**(அ) அலுவலரினால் பூர்த்திசெய்யப்பட வேண்டும்**

1. I. அலுவலரின் முழுப் பெயர் (தெளிவான எழுத்துக்களில்): திரு./திருமதி./செல்வி. .........................................................................................................................................
   II. தேசிய அடையாள அட்டை இலக்கம்: ...........................................................................................
   III. நிரந்தர முகவரி: ...............................................................................................................................
   IV. வதிவிட முகவரி: ..............................................................................................................................
   V. 2018 ஆம் ஆண்டில் ஏதேனும் வதிவிட மாற்றம் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படின் புதிய வதிவிடத்தின் முகவரி: ..............................................................................................................................................................

2. அலுவலர் இடமாற்றப்படும் சேவை நிலையம்: ...............................................................................................

3. பதவி மற்றும் தரம்: ..................................................................................................................................
   3.1 சேவைக்கு நுழைந்த திகதி: ..................................................................................................................
   3.2 தரத்தில் உள்வாங்கப்பட்ட திகதி:..........................................................................................................

4. பிறந்த திகதி: ..............................................................................................................................................
   2017/12/31ஆம் திகதியிலுள்ளவாறு வயது ……………………………………………………………………………..

5.

| சேவை விபரங்கள் | நியமனத் திகதி | சேவை நிலையத்திலிருந்து / சேவை நிலையத்துக்கு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

6. வழங்கப்பட்ட இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு / திருத்துமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

7. மேன்முறையீட்டுக்கான காரணங்கள்: (பக்கப் பின்புறத்தில் குறிப்பிடவும்)

8. இடமாற்றமானது எச் சேவை நிலையத்திற்கு வழங்கப்பட/ திருத்தப்பட வேண்டியுள்ளதோ அச் சேவை நிலையம்:

   அமைச்சு:.......................................................................................................................................
   திணைக்களம்: ..............................................................................................................................

திகதி: ......................................                ........................................................................
அலுவலர் கையொப்பம்

**(ஆ) திணைக்களத் தலைவரின் அவதானம்:**

I. அலுவலகக் கோவைகளில் கிடைக்கக்கூடிய விபரங்களுக்கு இணங்க மேற்படி விபரங்கள் சரியானவை
II. இடமாற்றத்தை இரத்துச் செய்வதற்காக / திருத்துவதற்காக வழங்கப்பட்ட விளக்கம் மற்றும் பரிந்துரை

திகதி:.................................                ..................................................................................
அமைச்சின் செயலாளரின் கையொப்பம்

(பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடவும். முழுமையற்ற மேன்முறையீடுகளானவை மேன்முறையீட்டுச் சபையினால் கருத்திற்கொள்ளப்படமாட்டாது. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பக்கப் பின்புறத்தினைப் பாவிக்கவும்)